பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 06 சனிக்கிழமை (19-04-1997) - UTHAYAN A Lively National Tamil Daily சுதிர்: 142

# வலி.வடக்கில் குறிப்பிட்ட தூரம்வரை

# மீளக்குடியமர மக்களுக்கு அனுமதி!

## பலாலியில் நடந்த மாநாட்டில் முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

**வலிகாமம் வடக்கில் உள்ள 11 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவார்கள்.**

**பலாலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.**

வலிகாமம் வடக்கில் மல்லாகம் தெற்கு, மல்லாகம் மத்தி, மல்லாகம் வடக்கு, அளவெட்டி வடக்கு, அளவெட்டி மத்தி, அளவெட்டி கிழக்கு, கணேசபுரம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி மேற்கு, தெல்லிப்பழை கிழக்கு, துர்க்காபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர்.

காங்கேசன் துறை வீதியில் தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து மல்லாகம் பக்கமாக 150 மீற்றர் தூரம் வரை மக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நேரத்தை குறைக்க இணக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 19

குடாநாட்டில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை இரவு 9-00 மணியில் இருந்து அமுல்செய்யப் பலாலியில் நடந்த மாநாட்டில் யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கருணதிலகா இணக்கம் தெரிவித்துள்ளார் என யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

அதேநேரம்— யாழ். நகரில் இருந்து வலிகாமம் பகுதிக்குச் செல்லும் கலட்டி தடைமுகாம் ஊடான பயண அனுமதி நேரத்தை மேலும் அரை மணித்தியாலத்தால் அதிகரிக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்து பரிசீலித்து பதில் அளிப்பதாக மேஜர் ஜெனரல் கருணதிலகா

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மற்றொரு ராணுவ நடவடிக்கைக்கு படையினர் தயாராகி வருகின்றனர்

கொழும்பு, ஏப். 19

''மற்றொரு பெரிய இராணுவ நடவடிக்கை எந்நேரமும் ஆரம்பமாகலாம்''

பி.பி.சி. சிங்களச் சேவைக்கு அதன் கொழும்புச் செய்தியாளர் அமல் ஜெயசிங்கா மேற் கண்டவாறு தெரிவித்தார்.

''இராணுவத்தினரின் ஆளணி நகர்த்தல்களை அவதானிக்கும் போதும்—

இராணுவத்தினருக்கு வழங்கப்படும் லீவு போன்ற விடயங்களை அவதானிக்கும் போதும்—இன்னும் சில நாள்களில், மிகவிரைவில் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது என்பதை எம்மால் அனுமானிக்க முடிகிறது.

''இந்த இராணுவ நடவடிக்கை இரண்டு இலக்குகளைக் கொண்டதாக இருக்கலாம்.

''வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி கிளிநொச்சி வரை செல்லும் பிரதான நெடுஞ்சாலையை கைப்பற்றுவது இராணுவத்தின் ஓர் இலக்காகும். இது ஒரு பெருமெடுப்பிலான நடவடிக்கையாக இருக்கும்.

''அதே நேரம் யாழ். குடாநாட்டில் இன்னும் இராணுவத்தினரால் முற்றிலுமாக சோதனைக்குள்ளாகாத— கண்ணி வெடிகளைச் செயலிழக்கச் செய்யாத சில பிரதேசங்கள் உள்ளன, நேற்று முன்தினம் கண்ணி வெடியில் இராணுவ வாகனம் சிக்கி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப மண்எண்ணெயிலை மலிவாய் ஓடின வாகனங்களுக்கு கஷ்டகாலம் ஆரம்பம் போலை......!

## கப்பல்-விமானப் பயணிகளுக்கு பிரயாண அனுமதி அட்டை

### சிவில் நிர்வாக அலுவலகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் அல்லது கப்பல் மூலம் தெற்கே செல்லும் பயணிகள் மீளத் திரும்ப விசேட ஏற்பாடு ஒன்றை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணம் செய்யும் போது யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் பிரயாண அனுமதிஅட்டை ஒன்றை தற்சமயம் வழங்க ஆரம்பித்துள்ளது.

மீளவும் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் திரும்ப விரும்புபவர்கள் இந்த அட்டையை திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் வேலும் மயிலுமிடம் சமர்ப்பித்து பயணம் செய்ய அனுமதி பெற்றுக் கொள்ள முடியும் என்றும்—

விமான மூலம் பயணம் செய்ய விரும்புபவர்கள் பம்பலப்பிட்டி கற்பகம் நிலையத்தில் உள்ள விமான முகவரிடம் இந்த அட்டையைச் சமர்ப்பித்து ஆசனத்தைப் பதிவுசெய்யலாம் என்றும்—யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கோ, பொலீஸ் நிலையத்துக்கோ, இரகசியப் பொலீஸ் பிரிவுக்கோ பயணிகள் செல்ல வேண்டிய தேவையில்லை என்று சிவில் அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

(இ-3)

### எரிபொருள் நிலையங்களில்

## வாகனங்களுக்கான ம. எண்ணெய் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 19

குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிலையங்களில் சகல வித வாகனங்களுக்கும் மண்எண்ணெய் விநியோகிப்பது நிறுத்தப்பட்டுவிட்டதாக யாழ். மாவட்ட சிவில் நிர்வாக இணைப் பதிகாரி அறிவித்துள்ளார்.

எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவையே இனி வாகனங்களுக்கு விநியோகிக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

(இ-3)

# புதிய தலைவர் ஒருவரை தெரிவதில் ஐக்கிய முன்னணிதொடர்ந்துமுயற்சி

### நேற்று இரவு வரை இணக்கம் எதுவும் ஏற்படவில்லை

புதுடில்லி, ஏப். 19

தேவகௌடாவுக்குப் பதிலாக புதிய தலைவர் ஒருவரைத் தெரிவதில் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் புதுடில்லியில் நேற்று மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். எனினும் புதிய தலைவர் தெரிவில் கருத்து உடன்பாடு எட்டப்படவில்லை. புதிய தலைவர் குறித்து இன்று அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம் புதிய தலைவரின் கீழ் ஐக்கிய முன்னணி அரசு அமைப்பதற்கு காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்று தெரிவிக்கும் கடிதத்தை காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி நேற்றுக் காலை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார்.

நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஐக்கிய முன்னணி செய்தித் தொடர்பாளர் திரு. ஜெயப்பால் ரெட்டி இதனைத் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களுக்கு மற்றொரு சம்பள உயர்வு

கொழும்பு, ஏப். 19

'ஆசிரியர்களுக்கு இன்னுமொரு சம்பள உயர்வு விரைவில் வழங்கப்படவிருக்கிறது' என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரானா காலியில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

''கடந்த இரண்டு வருட காலத்தில் ஆசிரியர்களுக்கு இரண்டாவது தடவையான சம்பள உயர்வு [illegible] என்றும் அவர் கூறினார்.

(இ-3-150)

## எல்லைக் கிராமங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஏப், 19

பொலன்னறுவை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் உள்ள காவல் அரண்கள்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று கிடைத்த புலனாய்வுத் தகவலை அடுத்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கூடுதல் படையினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மேலதிக ஆயுத தளபாடங்களும் அங்கு அனுப்பப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் '97

**13 - 04 - 97** எம்மால் எமது நிறுவனத்தில்
நடத்தப்பட்ட 19 ஆவது பரீட்சையில்

**செல்வன் இரங்கநாதன் கோகுல்நாத்**

(யா/ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி - புத்தூர்)

முதன்மைப் புள்ளி பெற்றமைக்குப் பாராட்டுகிறோம்.

**20 - 04 - 97** ஞாயிறு 20 ஆவது பரீட்சை
வழமை போல் நடைபெறும்.

**பரீட்சைப் பகுதி BOND Institutes**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(46439)


# மரண அறிவித்தல்கள்

## செல்வன் சுப்பிரமணியம் ஸ்ரீவக்சன்

காரைநகர் சந்தம்புளியடியைச் சேர்ந்த சீனியர் சுப்பிரமணியம் — ரேணுகாதேவி தம்பதிகளின் மூத்த புதல்வனும், செல்வி தாரகாவின் அன்புச் சகோதரனுமாகிய செல்வன் ஸ்ரீவக்சன் 15-04-1997 செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் ஸ்கந்தபுரத்தில் 16-04-1997 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சீனியர்—இராசநாயகம்**
(சித்தப்பா)

இல. 60/6,
இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(9535)

## திருமதி மகேஸ்வரி சீவரத்தினம்

கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி சீவரத்தினம் 17-04-97 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற தபாலதிபர் தம்பாபிள்ளை, இராசம்மாவின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திரு இ. சீவரத்தினம் (உடுவில் விஜயம்) ஒய்வூதியர் அவர்களின் அன்பு மனைவியும், ஈஸ்வரிதேவி, சிவசூரியர் (கொழும்பு), கோபாலரத்தினம் (நோர்வே), மகேசரத்தினம் (கனடா), காலஞ்சென்ற உமாதேவி, காலஞ்சென்ற அருட்சோதி மற்றும் புஷ்பதேவி, அருணகிரிநாதன் (தொழில்நுட்ப அலுவலர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்; அரியரத்தினம் (ஓய்வூதியர்), பரராஜசிங்கம் (ஓய்வூதியர்), சரவணதாசன் (ஓவசியர்), ஞானாம்பிகை, காலஞ்சென்ற சந்திரகுமாரி மற்றும் பொன்னரசி புனிதவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் இராசமுத்தையா, சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை, காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் யோகானந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பொ. சரவணதாசன்**

கல்வியன்காடு. (46426)

## திருமதி அக்னஸ் பேரின்பநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியை, பம்பலப்பிட்டி
St Peter's College)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அக்னஸ் பேரின்பநாயகம் காலமானார்.

இவர் பேரின்பநாயகம் (இளைப்பாறிய A O உள்ளூராட்சி அமைச்சு, கொழும்பு). அவர்களின் அன்பு மனைவியும், கிறேஸ்(ஆசிரியை Holy Family Convent, பம்பலப்பிட்டி) அவர்களின் அன்புத் தாயாரும், இசபெல்லா மனுவேற்பிள்ளை (கரவெட்டி), வெளிச் சோர்பிள்ளை சந்தியாப்பிள்ளை (கரவெட்டி), எலிசபேத் (இளைப்பாறிய ஆசிரியை, வத்தளை), காலஞ்சென்ற மரியமுத்து (மட்டக்களப்பு), அருட் சகோதரி Fedilina A. C (St. Joseph Convent, மட்டக்களப்பு), காலஞ்சென்ற யோசவ் (முன்னாள் மத்திய வங்கி ஊழியர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (19-04-1997) கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
**ம. மன்மதநாயகம்.** [மன்னன்)
(பெறாமகன்)

நெல்லியடி,
கரவெட்டி.

(சி/ 523)

## முருகேசு அம்பலவாணர்

(முன்னாள் கிராம சபைத்தலைவர், காரைநகர்)

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும், மருதடியை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு அம்பலவாணர் 17-4-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் முருகேசு - மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவானந்தராசா, ஆனந்தராசா, சர்வானந்தராசா, நித்தியானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கமலாதேவி, மகேஸ்வரி, பூரணம், சறோஜினிதேவி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18 - 4 - 97 இல் காரைநகரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
**அ. சர்வானந்தராசா**
(மகன்)

மருதடி,
காரைநகர். (46428)

மலேரியா தீவிரமாகப் பரவுகிறது

# வன்னியிலிருந்து வந்த அனைவரும் உடன் இரத்தப் பரிசோதனை செய்க

## சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு

திருநெல்வேலி, ஏப். 19

வன்னிப் பிரதேசத்தில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு மீளத் திரும்பி வந்துள்ளவர்கள் அனைவரும் மலேரியா இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவை பிரதிமாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே. ரி. சிவபாதம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

வன்னிப் பகுதியில் இருந்து வந்து கொண்டிருப்போரில் பலர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டுள்ளனர். வன்னியில் உரிய சிகிச்சை பெறமுடியாது போன நிலையில் இங்கு வந்துள்ளோர் மூலம் மலேரியா ஏனையோருக்கும் பரவ வாய்ப்புகள் உள்ளன.

எனவே அனைவரும் இரத்தப் பரிசோதனையை மேற்கொண்டு நோய் காணுமிடத்து பூரண சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

வன்னியிலிருந்து வந்தோர் தத்தமது பகுதியில் இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ள வசதியாக பின்வரும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

★ வலிகாமம் பிரதேசத்திலிருப்பவர்கள் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலை.

★ யாழ். மாநகர சபை பகுதியிலிருப்பவர்கள் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை, குருநகர் அரசினர் வைத்தியசாலை.

★ வடமராட்சி பகுதியிலிருப்பவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, அம்பன் அரசினர் வைத்தியசாலை.

★ தென்மராட்சி பகுதியிலிருப்பவர்கள் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை, பளை அரசினர் வைத்தியசாலை.

(ஐ-135)

## சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம், ஏப் 19

வட பிராந்திய ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தின் சிறுவர் தின விழா இன்று சனிக்கிழமை காலை 9–30 மணி முதல் யாழ். பல்கலைக் கழகம் முன்பாக சேர். பொன். இராமநாதன் வீதியில் உள்ள ஸ்ரீசத்தியசாயி நிலையத்தில் நடைபெறும்.

(இ-4)

## முறைசாரா கல்விப் பிரிவுக்கு பயிற்சியாளர்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். இந்து மகளிர் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவுக்கு பயிற்சியாளர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற்திறன் பயிற்சிகளான சிகையலங்காரம், சமையற்கலை ஆகிய பயிற்சிகளுக்கு ஆண்டு 11 இல் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 24 ஆம் திகதி ஆகும். (இ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும், வர்த்தக நிறுவக கணக்குப் பதிவுகள் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு பாடசாலையை விட்டு வெளியேறியோர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 25 ஆம் திகதியெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 19

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று 290 பயணிகளுடன் கப்பல் சேவை இடம்பெற இருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 540 முதல் 560 வரை உள்ளவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பட்டியல் இலக்கம் 541, 542, 543 ஆகியவற்றில் உள்ளவர்கள் நாளைக்குள் பிரயாணம் செய்யவேண்டும் என்றும் —

அதன்பின் பதிவுகள் ரத்துச் செய்யப்படும் என்றும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

(இ-3)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளைத் தலைமையகம்

# அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ் கிளையில், தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து முழுநேர பயிற்சிக்காக, 16—25 வயதிற்குட்பட்டவர்கள் தங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித்தகைமைகள் முதலியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பத்தினை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்ப முடிவு திகதி **25-04-1997** நேர்முகப்பரீட்சை கிளைத் தலைமையகத்தில் **02-05-1997** முற்பகல் 10-30 மணிக்கு தமிழில் கற்பவர்களுக்கும், **30-04-1997** முற்பகல் 10-30 மணிக்கு ஆங்கிலத்தில் கற்பவர்களுக்கும் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு வருகை தருபவர்கள் தகைமைச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். தகைமைகள்: இரு அமர்வுகளுக்கு மேற்படாத கீழ் வருவனவற்றை உள்ளடக்கி, க. பொ. த. (சா.த)இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்; தமிழில் கற்பவர்கள் தமிழில் திறமைச் சித்தியுடன், ஆங்கில மொழியில் சாதாரண சித்தியும்; ஆங்கிலத்தில் கற்பவர்கள் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன்: தமிழில் சாதாரண சித்தியும் பெற்றிருப்பதுடன் எண் கணிதம்/ வர்த்தக கணிதம்/ கணிதத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தமிழ்/ ஆங்கிலத்தில் கற்பவர்கள் அந்தந்த பாடங்களில் அதிவிஷேட சித்தி பெற்றிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

**கௌரவ செயலாளர்,**
**இ. செ. ச. யாழ். கிளை,**
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/533)



எமது
புதிய வெளியீடுகள்

**ராம்கி, குஷ்பு**
நடித்த
**தாலி புதுசு**

**சுமன், ரம்பா**
நடித்த
**ரம்பா ஓ ரம்பா**

**சுப்பஸோ**
(ரவி ஒளி கானம்)
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
இன்றிலிருந்து பிரதி...

(சி/535)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் அ. மு. அம்பலவாணர்

**(Chairman Ambalavanar)**

காரைநகர் பல. நோ. கூ. சங்கத்தின் முன்னாள் தலைவராக இருந்து அரும்பணியாற்றியவரும் பல காலம் காரைநகர் கிராமசபையின் தலைவராகவும், காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் தர்மகர்த்தா சபை செயலாளராக இருந்து அதன் முன்னேற்றத்திற்காக உழைத்தவரும் இன்னும் பல பொதுவேலைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மக்கள் மனதில் தன்னை நிலை நிறுத்தியவருமான

**அ. மு. அம்பலவாணர் அவர்கள்**

17-04-97 இல் அமரத்துவம் அடைந்துள்ளார். அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

**பணிப்பாளரும், பணியாளர்களும்,**
**காரைநகர் ப.நோ.கூ.சங்கம்**

காரைநகர். (46483)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தென்னாபிரிக்கா வருமாறு அழைப்பு

# முபுட்டு - கபீலா பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும் சாத்தியம்

கின்ஸாசா, ஏப். 19

ஸயரின் கிளர்ச்சியாளர்களின் கூட்டணித் தலைவர் லோறன்ஸ் கபீலாவுடன் பேச்சு நடத்த தென்னாபிரிக்காவுக்கு வருமாறு அதிபர் முபுட்டுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா இந்த அழைப்பை விடுத்தார்.

நெல்சன் மண்டேலாவுக்கும், கிளர்ச்சிக் கூட்டணித் தலைவர் கபீலாவுக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் கேப்ரவுணில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதேவேளை —

ஸயர் நாட்டு அதிபர் முபுட்டுவும் போராளிகளின் தலைவர் லோறன்ஸ் கபீலாவும் விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் முயற்சியின் பேரில் இந்த சமாதானப் பேச்சுவார்த்தை சாத்தியமாகலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஸயர் மக்கள் விடுதலைப் போராளிக் குழுவின் தலைவர் லோறன்ஸ் கபீலா தனது பொது வாழ்க்கையை தீவிர கம்யூனிஸ தொண்டராக ஆரம்பித்தவர். ஆனால் தற்போது அமெரிக்கா மற்றும் மேற்குலகத்தின் ஆதரவாளராகவும் நண்பர் ஆகவும் மாறியுள்ளார்.

எனினும் தனது ருண்தாடர்களை ஒரு கட்டுக்கோப்பான இராணுவமாக மாற்றுவதற்கு அவர் கம்யூனிஸ் சித்தாந்தங்களையும் பயிற்சி முறைகளையும் பயன்படுத்தியதாகத் தெரியவருகிறது.

**அமெரிக்க மக்களவை பதவி விலக கேட்கிறது**

அமெரிக்க மக்களவை ஸயர் அதிபர் முபுட்டுவை பதவி விலகும்படி வலியுறுத்தும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படியும் அத்தீர்மானம் அவரைக் கேட்டுள்ளது.

பதுவியிலிருந்து விலகுமாறு முபுட்டுவை நெருக்குமாறு அதிபர் கிளின்ரனுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## மக்கா அருகே மீண்டும் தீ விபத்து!

மக்கா, ஏப் 19

மக்கா நகரில் நேற்று முன்தினம் மற்றொரு தீ விபத்து ஏற்பட்ட போதிலும் தீயணைப்பு படையினர் திறமையோடு செயற்பட்டதால் மனித சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. பெருந் தீ விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கா நகரில் கடந்தவாரம் ஏற்பட்ட பெருந் தீ விபத்தில் 343 யாத்திரிகர்கள் பலியானதும், சுமார் 2 ஆயிரம் பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இந்த விபத்தில் சிக்கிய இந்திய யாத்திரிகர்களை அழைத்து வரும் பணியில் இந்தியா ஐந்து விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

(ஐ-10)

### ஆஜென்ரீனாவில் வேலை நிறுத்த முஸ்தீபு

புவனர்ய் அயர்ஸ், ஏப். 19

ஆஜென்ரீனாவில் தொழிலாளர் சம்மேளனம் பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையையும் பொலிஸ் அடக்கு முறையையும் எதிர்க்கும் நோக்கத்தில் இந்த வேலை நிறுத்தம் நடைபெறவுள்ளதாக தொழிலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பொது வேலை நிறுத்தம் இடம்பெறும் திகதி மேதினத்தன்று அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**உலக அரங்கில்**

## நிலஉரிமைகோரி விவசாயிகள் பிரேசில் தலைநகரில் பேரணி

பிறெசிலியா, ஏப். 19

பிரேசில் நாட்டுத் தலைநகர் பிறெசிலியாவில் கடந்த வியாழனன்று நிலமற்ற ஏழை விவசாயிகள் சுமார் இரண்டாயிரத்து ஐ நூறு பேர் நில உரிமைகேட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அவர்களுக்கு ஆதரவாக மாணவர்களும், தொழிலாளர்களும், இடதுசாரி ஆதரவாளர்களும் தாமாக வந்து இணைந்து விடவே பெரும் பேரணியாக அது உருவெடுத்தது.

இரண்டாயிரத்து ஐநூறு பேருடன் தொடங்கிய ஆர்ப்பாட்டப் பேரணி சுமார் ஒரு லட்சம் பேரைக் கொண்டதாகப் பரிணமித்தது.

தென் அமெரிக்க கண்டத்திலே மிகப்பெரிய நாடு பிறேசில். இந்தியாவைப்போல் இருமடங்கு நிலப் பரப்பைக் கொண்டது. ஆனால் நாட்டில் வளமான நிலங்களில் பாதிக்கு மேல் ஒரு சில தனி நபர் நிலப்பிரபுக்கள், பன்னாட்டு நிறுவனங்கள் வசமே உள்ளது.

அரசு நிலச் சீர்திருத்தத்தினை அமுல் படுத்த வேண்டும் என்ற கோரிக்கையோடு பிறேசில் நாட்டுக்கத்தோலிக்க திருச்சபை மக்களைப் போராட்டத்திற்கு பல காலமாக ஒருங்கிணைத்து வருகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற விவசாயிகள் பேரணியில் அரசுப் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 19 விவசாயிகள் பலியானார்கள்.

இந் நிகழ்ச்சி போராட்டத்துக்கு புதிய வேகத்தை அளித்தது.

(ஐ- 10)

## அலரிமாளிகையில் யஸீர் அரபாத் சந்திரிகாவுக்கு காட்டிய 'பிஸ்ரல்'

### புளொட் தலைவர் முன்னிலையில் சம்பவம்

அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா அலரி மாளிகையில் இராப்போசன விருந்துபசாரம் அளித்தது தெரிந்ததே. புளொட் தலைவர் சித்தார்த்தனும் அதில் கலந்து கொண்டார்.

விருந்தின்போது அவர்கள் மூவரும் சாதாரணமுறையில் உரையாடிக் கொண்டிருந்தனர். அச்சமயம் யஸீர் அரபாத்திடம் ''நீங்கள் இப்போது இடுப்பில் துப்பாக்கி வைத்திருப்பதில்லையா'' என்று புளொட் தலைவர் கேட்டார்.

அப்போது குறுக்கிட்ட ஜனாதிபதி சந்திரிகா ''அவர் இப்போது ஒரு தேசத் தலைவர். எனவே அதனை அவர் தம்மோடு எப்போதும் வைத்திருக்க வேண்டியதில்லை; மெய்ப்பாதுகாவலர்கள் இருக்கிறார்கள் தானே'' என்று தெரிவித்தார்.

சந்திரிகா இவ்வாறு கூறி முடிப்பதற்குள் திடீரென தமது சீருடைக்குள் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றை வெளியே எடுத்துக் காட்டினார் அரபாத்.

புளொட் தலைவர் சித்தார்த்தனும் சந்திரிகாவும் ஒருவரை ஒருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனராம் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

ஒரு தேசத் தலைவரின் அந்தஸ்தில் அரபாத் தற்போது இருந்தாலும் —

தனது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்று அவர் நம்புவதையும் —

பலஸ்தீன மக்கள் எதிர்பார்க்கும் சமாதானமோ விடிவோ எவ்விதத்திலும் இன்னமும் ஏற்படவில்லை என்பதையும் அவரிடம் உள்ள பிஸ்ரல் எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இஸ்ரேலுடன் மேற்காசிய சமாதான உடன்படிக்கை ஒன்றை உருவாக்கி விட்டதற்காக அரபாத்துக்கு சமாதான நோபல் பரிசு கூட வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## இராணுவத் தீர்வுக்காகவே அரசு பேச்சுக்களை நடத்த முற்படுகிறது

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 19

சிறிலங்கா அரசு இராணுவத் தீர்விலேயே நாட்டம் காட்டுகிறது என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்

''அரசியல் தீர்வுக்காக இராணுவ நடவடிக்கை; இராணுவத் தீர்வுக்காக பேச்சுவார்த்தை'' என்பதே அரசின் நிலைப்பாடாகும் என்று விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இராணுவ ஆதிக்கத்தின் கீழ் அரைகுறைத் தீர்வை தமிழ் மக்களிடம் திணிக்கவே அரசு விரும்புகிறது. அதனால் தான் அது இராணுவ முனைப்பில் ஆர்வங் காட்டுகிறது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொண்டிருக்கும் வரை பேச்சுக்கு ஏற்ற சூழ்நிலை இருக்கப்போவதில்லை என்று பிரபாகரன் கூறியிருப்பதையும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை —

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதாக வெளியான தகவல்கள் குறித்து கருத்து தெரிவித்த விடுதலைப் புலிகளின் லண்டன் கிளை வட்டாரங்கள்—

''பிரிட்டனில் உள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தினரை வெளிவிவகார அமைச்சர் பேச அழைத்தால் கூட அதற்கு புலிகள் மறுக்க மாட்டார்கள்; ஆனால் அது இரகசியப் பேச்சாக இருக்காது'' என்று தெரிவித்துள்ளன.

(ஐ)

## மரக்கறியை வற்றலாக்கிச் சேமிக்கப் பலர் முயற்சி

சாவகச்சேரி, ஏப். 19

மரக்கறி வகைகளின் விலை வீழ்ச்சியடைந்திருப்பதை அடுத்து சந்தைகளில் மக்கள் அவற்றைப் பெருமளவில் கொள்வனவு செய்து வருகின்றனர். சிலமரக்கறிகள் போதிய விற்பனை இன்றித் தேங்கி வருகின்றன.

மரக்கறி வகைகளை வற்றலாக உலர்த்தி சேமித்து வைத்துப் பாதுகாக்கும் முயற்சியில் சாவகச்சேரிப்பகுதியைச் சேர்ந்த பலர் ஈடுபட்டுள்ளனர்.

கத்தரிக்காய், பாவற்காய், பயற்றங்காய், கரட் என்பனவற்றை சிறு துண்டுகளாக நறுக்கி வெயிலில் காய வைத்துள்ளனர்.

இவற்றை உப்பிட்டுப் பாதுகாப்பதன் மூலம் மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் பயன்படுத்த முடியும்எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-31)

## கொழும்புத் துறைமுகத்தில் 3 கடற் கொள்ளையர் சிக்கினர்

கொழும்பு, ஏப். 19

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்ற கப்பல் ஒன்றில் கொள்ளையிட படகு ஒன்றில் வந்த மூன்று கொள்ளையர்களை கடற் படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மூவரும் வத்தளையைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது

கொழும்புத் துறைமுகத்தில் கப்பல் கொள்ளையிடப்படும் சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவது தெரிந்ததே.

(ஐ)

## பச்சிலைப்பள்ளிப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள்

### வீதிகளில் நடமாட மக்கள் அச்சம்

தென்மராட்சி. ஏப் 19

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளின் வீதிகளில் தோல் நோயுடன் அலையும் நூற்றுக்கணக்கான கட்டாக்காலி நாய்களால் வீதிகளில் நடமாட மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

தற்போது நிலவும் அதிகளவு வெப்பத்தினால் இந் நாய்களுக்கு விசர் நோய் ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

நகர்ப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் நாய்கள் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களால் பிடித்து அழிக்கப்படுவது போல் கிராமப் புறங்களில் அலையும் நாய்களைப் பிடித்து அழிக்க அந்தந்தப்பகுதி உள்ளூராட்சி மன்றங்கள் முன்வர வேண்டுமென பலரும் தெரிவிக்கின்றனர்.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகிறோம் வாழ்த்துகிறோம்

கோட்டங்களுக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகளாக பதவி உயர்வு பெற்று, ஸ்கந்தா அன்னையின் புகழ் மாலையை மேலும் பொலிவு பெறச் செய்யும் ஸ்கந்தாவின் மைந்தர்களான —

**திரு. அ. தற்பரானந்தன் - சங்கானை**
**திரு. ஆ. கமலநாதன் - தெல்லிப்பழை**
**திரு. க. கணேசலிங்கம் - உடுவில்**

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**ஆசிரியர் கழகம்.**

ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம்.

(சி/526)



# அறிவித்தல்

## வலி. கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. ச.
அச்சுவேலி
(மட்டுப்படுத்தப்பட்டது)

சங்கப் பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு

## வருடாந்தப் பொதுக்கூட்டம்
**(18-05-1997)**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 1997-05-18 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு (புதிய நேரம்) சங்கத் தலைவர் அவர்களின் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதென்பதை சங்கப் பொதுச் சபை உறுப்பினர்களுக்கு இத்தால் அறியத் தருகிறோம்.

மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏதாவது பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் பொதுச் சபைப் பிரதிநிதிகள் அப் பிரேரணையின் பிரதி ஒன்றை 30-04-97 ஆந் திகதிக்கு முன்னர் சங்கச் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக எழுத்து மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் பிரேரணைகள் வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டா என்பதையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதிநிதிகளுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதவர்கள் சங்க செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்** **செயலாளர்**

வலி. கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி.
(சி/524)



# ★★★ சிற்றியின் ★★★

## தங்க நாணயம்

## அதிர்ஷ்டசாலிகள் தெரிவு

மேற்படி பரிசில் திட்டத்தின் அதிர்ஷ்டசாலிகள் **18–4–97** அன்று திருநெல்வேலி கிராமசேவையாளர் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விவரங்கள் பின்வருமாறு.

**1 ஆம் பரிசு 43851 - பரன்**
**660680438 V**

**2 ஆம் பரிசு 43667**
**561550697 V**

**3 ஆம் பரிசு 42736 க. செல்வராஜா**
**502672959 V**

**ஆறுதல் பரிசில்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | 45298 | — | பரன் | 660680438 V |
| 2) | 42710 | — | அ. கணேசலிங்கம் | |
| 3) | 45006 | — | ம. யசீந்திரன் | 781722464 V |
| 4) | 41904 | — | S. ஆனந்தஜோதி | |
| 5) | 42031 | — | செல்வேந்திரதேவி | 606092318 V |
| 6) | 41905 | — | திருநெல்வேலிஸ்ரோர் | 556852170 V |
| 7) | 44941 | — | S. மனோஜாதேவி | 668212298 V |
| 8) | 46048 | — | பொ. தேவராசா | 580711480 X |
| 9) | 44964 | — | | 705041563 V |
| 10) | 44420 | — | வளர்மதி | 716792366 V |

மேற்கண்ட அதிர்ஷ்டசாலிகளை எமது ஸ்தாபனத்தில் வந்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**சிற்றிகாமன்ஸ் & ரெக்ஸ்ரைல்ஸ்**
**திருநெல்வேலி.**

(46430)


# சமய சந்நிதிகளில்

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் இன்று காலை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. பிற்பகல் 4 மணிக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். நாளை அன்னதானம் இடம் பெறும்.
(ஐ)

★ ★ ★

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் தேர்த்திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலையும் பிற்பகலில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
(ஐ-111)

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரர் கோயில் தேர்த்திருவிழா திங்கட்கிழமை காலை நடைபெறும். மறுநாள் தீர்த்தத் திருவிழா இடம் பெறும்.
(ஐ-111)

★ ★ ★

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகாபரமேஸ்வரி அம்மன் ஆலயவருடாந்த உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இம் மாதம் 22 ஆம் திகதியான சித்திராப் பௌர்ணமி தினத்தன்று நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் முடிவடையும்.
(ஐ-173)

★ ★ ★

கல்வயல் பெருங்குளம் அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோயில் தேர்த்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். மறுநாள் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.
(ஐ-111)

★ ★ ★

யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமட்சி அம்பாள் கோயில் தேர்த் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை10 மணிக்கு நடைபெறும். செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம் பெறும்.
(ஐ-111)

★ ★ ★

கரணவாய் மூத்த விநாயகர் ஆலய சித்திரத்தேர் பவளக்கால் நாட்டும் வைபவம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

சித்திரத்தேர் புனருத்தாணம் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய சிற்பாசாரியார் திரு. ஆ. சீவரத்தினம் ஆச்சாரியாரினால் மேற்கொள்ளப்பட்டது.
(ஐ)

★ ★ ★

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சித்திரா பௌர்ணமி திருவிளக்கு பூசை நடைபெறும்.
(ஐ-111)

★ ★ ★

மரியாயின் சேனை யாழ். ஆச்சேஸ் விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் புனிதமரியன்னைபேராலயத்தில் நடைபெறும்.
(ஐ-173)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 19

இணுவில் தெஸ்பியன் கலை வட்டம் நடத்தும் நான்காவது மாதாந்தக் கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெஸ்பியன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

'இசை நாடகங்கள்' என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் கலாநிதி கா. [illegible] துரையாற்றுவார்.
(ஐ)

# கசிப்பு உற்பத்தி, விற்பனை தொடர்பாக 40 வழக்குகள்

## இது வரை தாக்கல் எனத் தகவல்

திருநெல்வேலி, ஏப். 19

யாழ். மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி, விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மதுவரி திணைக்களத்தினால் நாற்பதுக்கும் அதிகமான வழக்குகள் இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இத் தகவலை யாழ். மாவட்ட மது வரித்திணைக்கள உதவி ஆணையாளர் திரு. வீரவாகு துரைராஜா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கசிப்பு வடித்தல், விற்பனை செய்தல் என்பன தற்போது அதிகரித்து வருகின்றது.

பாண் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வரும் 'ஈஸ்ற்' எனப்படும் பொருள் கசிப்பு தயாரிப்பதற்கும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

பேக்கறி உரிமையாளர்கள் சங்கம் பேக்கறிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு ஈஸ்ற்றை விநியோகிக்கவும் வெளிக்கடைகளில் அதை பெற முடியாதவாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் இதனை கட்டுப்படுத்தலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
(ஐ-135)

# கோட்ட மட்ட மெய் வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 19

பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட மெய் வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நல்லூர் கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளிலும்—

யாழ்ப்பாணம் கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.
(ஐ-5)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் அ. மு. அம்பலவாணர்
அவர்கள்
(இடைப்பிட்டி காரைநகர்)

காரைநகரைச் சேர்ந்த திரு. அ. மு. அம்பலவாணர் அவர்கள் 17-4-97 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் அமரத்துவம் அடைந்துள்ளார். இவர் காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகச் செயலாளரும் ஆவார். அன்னாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீரஞ்சலியையும், செலுத்துகின்றோம்.

**ஆ. சிற்றம்பலம்**
காரைநகர், மருதடி, வீரகத்தி விநாயகர் ஆலயப் பொறுப்பாளர்.
(பிரஜைகள் குழுத் தலைவரும், காரைநகர் ப. நோ. கூ. ச. தலைவரும்)
**ச. ஆ. சோமசுந்தரம்**

விளானை,
கரைநகர்,

(46434)



# ஓராண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதி அழைப்பும்



## திருமதி சின்னம்மா மகாலிங்கம்

**மலர்வு:** **15 – 08 – 1944**
**உதிர்வு:** **30 – 04 – 1996**

திருமதி சின்னம்மா மகாலிங்கம் அவர்களின் ஆண்டுத் திதி பிரார்த்தனை இன்று (19-04-97) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

ஓராண்டு நினைவு வைபவங்களிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**சி. மகாலிங்கம் (கணவன்),**
**பிள்ளைகள்.**

சண்டிலிப்பாய் தெற்கு,
சண்டிலிப்பாய்.

(சி/ 522)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## ஆசார்யாபிஷேக அழைப்பு
**(குருப்பட்டாபிஷேகம்)**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுரவருடம் சித்திரைத் திங்கள் 7ஆம் நாள் (**20-04-1997**) ஞாயிற்றுக் கிழமை மு. ப. 11-37 மணி முதல் 1-12 மணி வரை யுள்ள உத்தர நட்சத்திரமும் அமிர் தசித்த யோகமும் கூடிய கடகலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

**யாழ். நாயன்மார்கட்டு**
**ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் தேவஸ்தான மண்டபத்தில்**

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் ஆதரவில் சிவான்ந்த குருகுல மாணவனும், எனது புத்திரனுமாகிய

**சிரஞ்சீவி. தி. அழகேசன் ஐயா**
அவர்களுக்கு

ஆசார்யாபிஷேகம் (குருப்பட்டாபிஷேகம்) நடத்த மஞ்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீர கத்தி விநாயகர் திருவருள் துணை கொண்டு பெரி யோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து நடைபெறும் கிரியைகளில் பங்கு கொண்டு வைபவத்தைச் சிறப்பிக்கும் வண் ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசார்யாபிஷேக பிரதம குரு
ஆகமக்கிரியா ஜோதி
**சிவஸ்ரீ ச. மகாலிங்கசிவக் குருக்கள்**
(நாயன்மார்கட்டு ஸ்ரீ அரசடிப்பிள்ளையார் தேவஸ்தானம்)

அருள் ஆசியுரை
சமஸ்கிருத பண்டிதர், வித்யா குரு
**சிவஸ்ரீ கி. சதாசிவ சர்மா மட்டுவில்**

தங்கள் நல்வரவை நாடும்:
**ச. தில்லைநாதன் ஐயா குடும்பத்தினர்**
(பிரபல சாத்துப்படி அமைப்பாளர்)

25, அரசடிப் பிள்ளையார் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர். (சி/520)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக ஆசிரியை
**செல்வி M. B. சாந்தி**
அவர்களின் அன்புத் தந்தையார்
**தோமஸ் மரியாம்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி விப்பதோடு, அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக் காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்.
**யா/நாரந்தனை கணேச வித்தி.**
**யா/நாரந்தனை றோ. க. ம. வி.**
(46396)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மு. சி. சுப்பிரமணியம்**
(சித்த வைத்திய கலாநிதி, வடலியடைப்பு)

மண்ணுலகு: 09 — 09 — 1905
விண்ணுலகு: 31 — 04 — 96

**திதி: 19 - 04 - 97**

இறைவனடி சேர்ந்த எமது தந்தையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

டாக்டர் எஸ். தியாகராசா,
வடலியடைப்பு. (9529)

# யாழ். கல்விவலயங்களில் விரைவில் பாட இணைப்பாளர்கள் நியமனம்

வலிகாமம் தெற்கு ஏப். 19 உதவிக் கல்விப்பணிப் பாளர்களின் கடமைகளை ஒத்த கடமைகளை ஆற்று வதற்கும் —

வடக்குக் கிழக்குமாகாணக் கல்வி அமைச்சினால் அமுல் படுத்தப்பட உள்ள மூன் றாண்டு கால வேலைத்திட் டத்தை முன்னெடுத்துச் செல் லும் பணிகளில் ஈடுபடவும் என யாழ். மாவட்டக்கல்வி வலயங்களில் பாட இணைப் பாளர்கள் தெரிவு செய்யப் பட உள்ளனர்.

விசேடபாடத்துறைகளான ஆரம்பக்கல்வி. விஞ்ஞானம், கணிதம், தமிழ்மொழி, ஆங் கிலம், சமூகக்கல்வி. உடற் கல்வி, சமயம், விவசாயம், வர்த்தகம், மனையியல், சங்கீதம், நடனம், சித்திரம் போன்றவற்றில் பாட இணைப்பாளர்களைச் சேர்த் துக் கொள்வதற்காக யாழ்ப் பாண கல்வி வலயங்கள் இரண்டும் விண்ணப்பங்களை கோரியுள்ளன.

அதிபர்கள், ஆசிரியர்கள், முதன்மை ஆசிரியர்கள் உட் பட தகுதியானவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆசிரியர் சேவைத்தரம் 2-I, 2-II இல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

52 வயதுக்குட்பட்ட பட்ட தாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 10 ஆண்டுகால ஆசிரிய சேவையை பூர்த்தி செய்திருந்தால் விண்ணப்பிக் கலாம். ஆனால் இவர்களுக்கு அரச சேவைகளில் பட்டியற் படுத்தப்படாத இப்பதவி களுக்கு தனியான சம்பளத் திட்டம் எதுவும் வழங்கப்பட மாட்டாது எனவும், பயணப் படி, விசேட கொடுப்பனவு களே வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கல்விவலயம் ஒன் றின் விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 20 ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள் ளது. (ஐ-152)

## புதிய படகு வெள்ளோட்டம்

நெடுந்தீவு, ஏப். 19

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தின் புதிய படகான "சமுத்திர தாரகை" யின் வெள்ளோட்ட விழா சங்கத் தலைவர் திரு. எஸ்.கோபால சிங்கம் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடை பெறும்.

யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் புதிய பட கின் சேவையைத் தொடக்கி வைப்பார். படகு வெள் ளோட்ட விழாவை முன் னிட்டு நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் விசேடபூசையும் நடைபெறும் என பல நோ. கூ. சங்க வட் டாரங்கள் தெரிவித்தன. (ஐ-111)

## கலந்துரையாடல்

திருநெல்வேலி ஏப். 19

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் இலவச சித்த ஆயுர்வேதவைத் தியசாலைகளில் கடமை யாற்றும் ஆயுர் வேத வைத் தியர்களுக்கான கலந்துரை யாடல் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் அலுவலகத்தில் எதிர் வரும் புதன்கிழமையன்று முற்பகல் நடைபெறவுள்ளது. (ஐ-135)

## காசோலைகளை ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 19

பொதுப் பரீட்சைகளில் கடமை புரிந்த ஆளணியின ருக்கு வழங்கப்பட்ட காலா வதியான காசோலைகளை நாளை திங்கட்கிழமைக்கு முன் யாழ். கல்வி வலயம் 1 இன் அலுவலகத்தில் ஒப்ப டைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் [illegible] லிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ)

**தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
பதிவு இல. J/ 1591 - 06 - 03 - 72

### பொதுச்சபை உறுப்பினர்களுக்கான அறிவித்தல்

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 28 - 04 - 97 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு. நா. கணே சன் அவர்களின் தலைமையில் ஆனந்தா வீதி, மானிப் பாய் என்னும் முகவரியில் அமைந்துள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். பொதுச் சபை உறுப்பினர்களுக்கான கூட்ட நிகழ்ச்சி நிரல் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறி வித்தல் கிடைக்கப்பெறாதவர்கள் சங்கஅலுவலகத்தில் தொடர்பு கொண்டு அறிவித்தலை பெற்றுக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். பொதுச் சபைப் பிரதிநிதிகள் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கு மாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**நா. கணேசன்** தலைவர் — **செ. திருஞானம்** செயலாளர்
(46429)

**தெல்லிப்பழை**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
(வரையுள்ளது)

### விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

**காலம்:** 1997-04-27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10. 00 மணி (புதிய நேரம்)

**இடம்:** யா/மல்லாகம் மகா வித்தியாலய மண்டபம்.

**தலைமை:** திரு. சி. சிவமகாராசா அவர்கள்
சங்கத் தலைவர்

**முதன்மை விருந்தினர்**

திரு. செ. சண்முகநாதன் அவர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

திருமதி கோமளா திருநாவுக்கரசு அவர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்- கணக்காய்வு.

**சிறப்பு விருந்தினர்**

திரு. ரி. வி. கிருஸ்ணசாமி அவர்கள்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

திரு. வ. சத்தியசீலன் அவர்கள்
உதவித் திட்டப் பணிப்பாளர், வலி. வடக்கு

திரு க. ஆனந்தராசா அவர்கள்
முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்.

திரு. சி. சிவஞானம் அவர்கள்
பிரதேச முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.

திரு. எ. சின்னத்தம்பி அவர்கள்
தலைமைக காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர்.

திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள்
செயலாளர், மாவட்டக் கூட்டுறவுச் சபை, யாழ்ப்பாணம்.

**முக்கிய குறிப்பு:**

1. நிகழ்ச்சி நிரல் பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்கப் பெறாதவர்கள் சங்கத் தலைமை அலுவலகத்தில் செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
2. பிறமாவட்டத்திலிருந்து அண்மையில் இம் மாவட் டத்துக்கு வருகை தந்த பொதுச் சபைப் பிரநிதி கள் தங்களின் தற்போதைய முகவரியை சங்க செய லாளருக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.
3. சங்க கணக்காய்வு அறிக்கைகள் ஏற்கனவே அறி வித்தபடி சங்க தலைமைக் காரியாலயத்தில் பொதுச் சபைப்பிரதிநிதிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.
4. மேலதிக விவரங்களுக்கு நேரடியாகச் சங்கச் செய லாளருடன் தொடர்பு கொள்ளும்படி பொதுச் சபைப் பிரதிநிதிகள் கேட்டுக்கொள்ளப்படுகின் றனர்.
5. பொதுச் சபைப் பிரதிநிதிகள் அனைவரையும் கூட் டத்துக்கு தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**சி. சிவமகாராசா** தலைவர் — **சி. முருகையா** செயலாளர்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.
- மல்லாகம் -

1997 - 04 - 18 (சி-521)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குழி சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக 30 பரப்புக்காணியும், சகல வசதிகளும் கொண்ட 2 மாடி வீடுகளும் உடன் விற்பனைக்குண்டு. ஹோட்டல் நடத்துவதற்கு உகந்தவை தொடர்பு: க. அரியநாயகம் சட்டத்தரணி, 71/5, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
[46416]

பலகை அரியக்கூடிய 5 வேம்பு, இலுப்பை, பாலை மரங்கள் உடன் விற்பனைக்குண்டு. கூடிய விலை கோருபவர்களுக்கு விற்கப்படும். தரகர் இல்லை. தொடர்பு: ந. பாலசுப்பிரமணியம், மக்கள் வங்கி அருகாமை, வல்வெட்டி. [46424]

சகலவிதமான ரி.வி அன்ட் றேடியோவிற்கு உரிய I C, டெக்பெல்ற், E.H.T டிரான்ஸ்போமர், அன்ரனா, அன்ரனா கிளிப், யங்சன் (F) பொக்ஸ், கைக்கடிகாரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 310, பலாலி வீதி, ஆலடிச் சந்தி, கந்தர்மடம்.
[46417]

புதிய றொபின் EY-15 நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. விலை 20,500/- தொடர்பு: லோ. ஜெகநாதன் 136, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[46418]

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் ஒரு சிறிய குடும்பத்துக்கு படித்த பணிப்பெண் (15,வயதிற்கு மேல்) தேவை. தொடர்பு: மே/பா இல, 607, உதயன், யாழ்ப்பாணம். [46406]

### தவறிவிட்டது

கடந்த 9-ம் திகதி ஸ்ரான்லி வீதியில் உள்ள—முனீஸ்வரன் கபேயில் பெறுமதியானஎனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ந. பேரின்பநாதன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, 45/4,நாயன்மார் வீதி, நல்லூர் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
[46400]

சுப்பர் சின்னத்துரை என்பவருடைய கட்டுவன், தெல்லிப்பழை என முகவரியிடப்பட்ட தேசிய அடையாள அட்டை ஏழாலை — யாழ். போதனா வைத்தியசாலை இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஊரங்குணை, ஏழாலை வடக்கு எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (9526)

ஆறன் துரையப்பா என்பவரது வசாவிளான் தெற்கு என முகவரியிடப்பட்ட தேசிய அடையாள அட்டை யாழ். மாநகரசபை எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுப்பவர் யாழ். ஆஸ்பத்திரி முன்பான ஆட்டோ தரிப்பிடத்தில் ஒப்படைக்கவும். (46423)

### கணிதம்

ஆண்டு 6 முதல் G. C. E. O/L கணிதமும், G C E A/L தூய, பிரயோக கணிதமும், புள்ளிவிவரவியல் குழுக்களாகவும், தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். NAREN B- Sc 32, Temple Road Jaffna (46401)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 16
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
(ஐ-4)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely.
[46375]

### மாறி எடுக்கப்பட்டது

ஆஸ்பத்திரி வீதி பேரம்பலம் மதுபான கடைக்கு பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த எனது லுமாலா சைக்கிள் தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது அதற்குப் பதிலாக வேறு ஒரு லுமாலா சைக்கிள் என்னிடம் உள்ளது. உரியவர் ஆதவன் றேடிங் கம்பனி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (46422)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 01 — 1914

மறைவு: 30 — 04 — 1996

### அமரர் அருணாசலம் கந்தையா

(முன்னாள் பத்திரிகை ஏஜண்ட்)

**திதி: 20 - 04 - 1997 திரயோதசி**

ஓராண்டு சென்றதையா ஆறவில்லை எம் இதயம்
வாயார ஐயாவென்று அழைத்திடவே நீங்களில்லை.
ஆறவில்லை எம் இதயம்.


உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

20-04-97 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன் ஒழுங்கை,
ஆவரங்கால்.
(9523)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



பண்ணுலகில்: 28-10-1947

விண்ணுலகில்: 19-04-1996

அமரர்
### சீவரத்தினம் சிவசுப்பிரமணியம்

(சட்டடத் திணைக்கள பிரதான பொறியியலாளர் அலுவலக ஊழியர்)

**திதி: 08 - 05 - 1997**

பாசத்தைப் பொழிந்து அன்பாக வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது
எங்கே அப்பா சென்று விட்டீர்கள்?
ஆயிரம் காலம் வாழ வேண்டிய நீங்கள்
அறுவடையானது ஏன் அப்பா?
ஊரே ''மணியம்'' என்னும் நாமத்தை உச்சரிக்க நாங்கள் உங்களை ஆசையுடன் அப்பா எனக்கூற முடியாதவாறு எம்மை அனாதைகளாக்கிவிட்டு எங்கே அப்பா சென்று விட்டீர்கள்?
உங்கள் ஆத்ம சாந்திக்காக நெஞ்சுருக வேண்டிநிற்கும்;

பாசமிகு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி.

கண்டி வீதி,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(9483)

புதுவையூர்
அருள்மிகு மஞ்சல் உணா
ஸ்ரீ நகுல ஞானவைரவ சுவாமி
திருக்கோயிலில்
## மகா கும்பாபிஷேகம்
### பஞ்சகுண்ட மகா யாகம்

நிகழும் ஈசுர வருஷம் சித்திரை மாதம் (21-04-97) 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் 7 30 வரையுள்ள மேடலக்கினத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்
20-04-97 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 3 00 மணி வரை நடைபெறும்.
அடியார்கள் அனைவரும் பங்குபற்றி திருவருள் பெறுவீர்களாக.

பிரதம குரு - திரு. கெங்காதரக் குருக்கள்
புன்னாலைக் கட்டுவன்

மஞ்சல் உணா ஸ்ரீ நகுல ஞானவைரவர் தேவஸ்தானம்.
(46415) ஏரந்தனை புத்தூர் வடக்கு.

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
### எல்லுப்போலை சுப்பிரமணியம்

பூவுலக வாழ்க்கை ஆரம்பம்: 19 — 10 — 1924
விண்ணுலக வாழ்க்கை ஆரம்பம்: 29 — 04 — 1996

**திதி: 19 - 04 - 97**

அன்பாலும் பாசத்தாலும் மனதில்
களங்கமில்லா கனிவுறு சொற்களாலும்,
சிரித்த இன்முகப் பொலிவுடன் எங்களை
வழி நடத்திய தலைவனே!
அன்பைப் புகட்டிப் பண்பை வளர்த்த
உங்கள் அருமை முகம்!
எம்மை விட்டு ஏழேழு பிறவியிலும் அகலாது!

பிரிவால் துயருறும்:
மனைவி மனோன்மணி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் வடக்கு,
உச்சியோடை,
மானிப்பாய்.
(9527)

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அ. கமலாதேவி B. A.

(அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)

தோற்றம்: 03 — 01 — 1948

மறைவு: 15 — 04 — 1981

**திதி: 19 - 04 - 1997**

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் முகம் என்றென்றும் எங்கள் உள்ளங்களில் பதிந்திருக்கும். உங்கள் நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்.

உங்கள் நினைவால் வாடும்:
தாயார், சகோதரன், மைத்துனி, மருமக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள்,சிறியதந்தையர்கள்,
சிறியதாய்மார்கள், மாமன்மார், மாமிமார்,
மச்சான்மார், மச்சாள்மார்.

'' அக்கா அகம் ''
இணுவில்.
(சி/ 518)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
[illegible] நூலகம்.

# உதயன்

## ஏது யாது?

ஆபிரிக்க நாடான கென்யாவுக்குள் நுழைய முயன்ற ஈழத் தமிழ் இளைஞர், யுவதிகள் ஒன்பது பேர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமது சொந்தப் பிரதேசத்தில் வாழ்வது பாதுகாப்பற்றது, நிம்மதியற்றது என்று கருதி வெளிநாடுகளுக்குப் புலம் பெயரும் முயற்சியில் ஈடுபட்டவர்களில் சிலரே இக்குழுவினர் எனலாம்.

தமிழ்ப் பகுதிகளில் அமைதியான சூழலில் இயல்பு வாழ்க்கை வாழ முடியாது என்று கண்டு, இங்கு எதிர்நோக்கக் கூடிய ஆபத்துக்களில் இருந்து தப்பி விடும் எண்ணத்துடன் எப்படியாவது புலம் பெயர்ந்து விடுவோம் என்று பலரும் நினைக்கிறார்கள். மிகக் குறிப்பாக வயது வந்த பிள்ளைகளின் பெற்றோர்களில் பலர் இத்தகைய நினைப்புடையவர்களே.

ஆதலால் அவர்கள் இங்கிருந்து கொழும்பு சென்று, பிரயாண முகவர்களிடம் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து, பிள்ளைகளை அகதிகளாகப் புகலிடம் கோருவதற்கென்று வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

பிரயாண முகவர்களும் பணம் சம்பாதிக்க இது தான் தக்க தருணம் என்று கருதி பிறநாடுகளுக்கு தமிழ் இளைஞர், யுவதிகளை பாதுகாப்பாக அனுப்பி வைப்பதாக உறுதி அளிக்கின்றார்கள்; பணத்தைக் கறக்கிறார்கள். ஊசிக்குள்ளாலே போய் உலக்கையினூடாகச் செல்லும் பயண வழிகளைக் கண்டறிந்து பல உத்திகளைக் கடைப்பிடித்து அனுப்பி விடுகிறார்கள்!

இவ்வாறு அனுப்பப்படுவோரில் ஒரு சாரார் எப்படியோ குறிப்பிட்ட நாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். மிகுதிப் பேர் பிடிபட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

இவ்வாறு தமிழ் இளைஞர், யுவதிகள் பெரும் எண்ணிக்கையில் புலம்பெயர முண்டியடிப்பதையும், வெளிநாடுகளில்அகப்பட்டு அவஸ்தைப் படுவதையும் வேடிக்கை பார்க்கும் அணுகுமுறையை அரசு கைக்கொள்ளக் கூடாது

அவர்கள் சட்டவிரோதமாகப் பயணம் செய்கிறார்கள். வெளிநாடுகளில் புகலிடம் தேடி அரசுக்கும் நாட்டுக்கும் அவமரியாதையை உண்டாக்குகிறார்கள். அரசுக்கு எதிரானவர்கள் என்பதாலேயே வெளிநாடு செல்ல முயன்றார்கள். அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும்; அல்லது விசாரித்துச் சிறையில் தள்ள வேண்டும் என்றெல்லாம் நோக்கக் கூடாது.

அதற்குப் பதிலாக, யாழ்ப்பாணத்துத் தமிழ் இளைஞர் யுவதிகளை வெளிநாடுகளுக்குப் புலம்பெயரத் தூண்டும் இங்குள்ள வாழ்க்கைச் சூழல் மற்றும் புறநிலைக் காரணிகள் எவை என்பதனைக் கண்டறிய வேண்டும்.

இளைஞர் யுவதிகள் வெளியே ''ஓடாமல்'' தடுப்பதற்கு வாழ்க்கைச் சூழல், புறநிலையை எவ்வாறு மாற்றலாம். அவர்கள் பாதுகாப்புடன் இயல்பு வாழ்க்கை நடத்த என்ன நடவடிக்கை எடுத்து அவர்களின் அச்சத்தையும் விரக்தியையும் போக்கலாம் — என்ற ஆக்கபூர்வமான அணுகுமுறையை கைக்கொள்ள வேண்டும்.

அரசு இந்த வழியில் சிந்திக்குமா?

# களுத்துறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரில்
# 87 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 19

வடக்கு — கிழக்கில் பல்வேறு சந்தர்ப்பங்களில் படையினரால் கைது செய்யப்பட்டு களுத்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 121 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று ஈ.பி.டி.பி. யாழ் அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளது.

கொழும்பு, வவுனியா, அனுராதபுரம், கல்கிசை நீதிமன்றங்களில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தப்பட்டியலில் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 87 பேரின் பெயர் விவரங்கள் பின்வருமாறு:-

★ ஸ்ரீஸ்கந்தராஜா சௌந்தரவேல் — பூந்தோட்டம், வவுனியா.

★ சுப்பையா பாலகுமார் — 42, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

★ பழனி சின்னையா — சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

★ செல்வரட்ணம் மதியழகன் — லோட்டஸ் வீதி, வண்ணார் பண்ணை.

★ கிருஷ்ணன் செல்வராஜன் — யாழ்ப்பாணம்.

★ வல்லிபுரம் மனோகரன் — அல்வாய் மேற்கு, அல்வாய்.

★ துரைராஜா யுவன்ராஜ் — வைத்தியசாலை வீதி, சங்கானை.

★ இராஜரட்ணம் மயூரன் - நாவலர் வித்தியாசாலை அருகில், பருத்தித்துறை.

★ சுந்தரலிங்கம் இளஞ்செழியன் — பூங்காடு, காரைநகர்.

★ செல்லையா மதியழகன் — புத்தூர், அச்சுவேலி.

★ வலண்ரயன் கொலம்பஸ் டயஸ் — 84, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

★ தியாகராசா யோகராசா — மைலன் துறை, தொண்டமனாறு.

★ நாகமணி துரைலிங்கம் — மயிலங்காடு, சுன்னாகம்.

★ பாலசுப்பிரமணியம் மனோகரன் — பத்தமேனி, அச்சுவேலி.

★ தில்லைநாதன் ஐயர் சுரேந்திரன் — நாயன்மார் கட்டு, நல்லூர்.

★ அழகுரட்ணம் நகுலதாஸ் — 691, கருணைவாடி மேற்கு, யாழ்ப்பாணம்.

★ குமாரசுவாமி அருணாசலம் — பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.

★ கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரன் — இணுவில் வடக்கு, இணுவில்.

★ கணபதிப்பிள்ளை பரமேஸ்வரலிங்கம் — காரைநகர்.

★ சுப்பிரமணியம் குணசீலன் — கோண்டாவில் தெற்கு.

★ இரட்ணசபாபதி சிவலிங்கம் — ''திரு இல்லம்'', யாழ்ப்பாணம்,

★ சிவலிங்கம் ரமேஷ் — 71, புகையிரத வீதி, கந்தர்மடம்.

★ பொன்னம்பலம் ரவி — அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

★ தோமஸ் நியூட்டன் — ஐஸ் தொழிற்சாலை, காரைநகர்.

★ இராமசாமி பாக்கியராஜ் — ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

★ பொன்னுத்துரை திருலிங்கம் — இணுவில் தெற்கு, இணுவில்.

★ ரவிச்சந்திரன் சுதாகரன் — கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ புண்ணியமூர்த்தி சசிசந்திரகுமார் — கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ விஸ்வநாதன் [illegible]குமார் — கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ அருளானந்தம் உதயகுமார் — புதியசோனகதெரு, அராலி வீதி, யாழ்ப்பாணம்.

★ மகாதேவன் ராஜ் — சுதுமலை தெற்கு.

★ பொன்னுச்சாமி சந்திரா — சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

★ தங்கவேலு குணவேலு — சுதுமலை தெற்கு.

★ அருமைதுரை நாகதீபன் — சுதுமலை தெற்கு.

★ நடராசா கோபிஹரன் — மானிப்பாய்.

★ தேவதாஸ் வெஸ்டின் லோயிட் — அந்தோனியார் கோயில் வீதி, மானிப்பாய்.

★ தில்லைநடராசா மோகனராஜ் — மட்டுவில் தெற்கு.

★ சின்னத்துரை ரேமன் வில்பட் — 352, ஆனைக்கோட்டை.

★ நடராசா சிவகுமார், சுதுமலை தெற்கு — ஆனைக்கோட்டை.

★ தேவேந்திரன் ஆனந்தராசா — சுதுமலை தெற்கு.

★ ஏ. ராகவன் ஸ்ரீகாந்தன் — சண்டிலிப்பாய்.

★ சுப்பிரமணியம் ஜெகதீபன் — கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

★ சற்குணராஜா கெங்காதரன் — 394, மட்டுவில் தெற்கு, மட்டுவில்.

★ பாலசுந்தரம் பிரபாகரன் — கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி.

★ கந்தசாமி கணபதிப்பிள்ளை — 452/1, மீசாலை வடக்கு, கொடிகாமம்.

★ முருகேசு யோகராஜா — கலேந்தர் வீதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

★ கனகரட்ணம் கனகரூபன் — மடத்தடி வீதி, சாவகச்சேரி.

★ சின்னத்தம்பி அழகேந்திரன் — கைதடி மேற்கு, கைதடி.

★ அருமைநாதன் அசோகன — கைதடி மேற்கு,

★ சுந்தரலிங்கம் செல்வரூபன் — பிள்ளையார் கோயில் அருகில், கோப்பாய்.

★ பாலசுப்பிரமணியம் பிரபாகரன் — பழையதெரு, கோப்பாய்.

★ பற்குணராசா பிரபாகரன் — விளையாட்டு மைதானம் வீதி, கரப்பன்காடு, கோப்பாய்.

★ செல்வதுரை ஜெயவர்த்தனராசா — உரும்பிராய் தெற்கு, செல்வபுரம்.

★ இந்திரன் ரமேஷ்குமார் — அம்மன் கோயிலடி மட்டுவில்.

★ பரஞ்சோதி ஜீவகன் — ஆசிரியர் வீதி, சாவகச்சேரி.

★ ஆறுமுகம் ஜெபசேகரன் — 3 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை

★ செல்லப்பன் செல்வராஜா — 228/2, புங்கன்குழி மேற்கு, வட்டுக்கோட்டை.

★ அன்ரனி கலிஸ்டர் — 5/1, சில்லாலை, பண்டத்தரிப்பு.

★ கிருஷ்ணமூர்த்தி சுதாகரன் — சங்கானை.

★ தம்பிரட்ணம் ஸ்ரீகாந்தன் — நவாலி தெற்கு, பத்திரகாளி கோயில், ஆனைக்கோட்டை.

★ நாகரட்ணம்சந்திரதாஸ் — இணுவில் பிள்ளையார் கோயிலடி, உடுவில்.

★ நடராசா நகுலேஸ்வரன் — மீசாலை தெற்கு, மீசாலை.

★ குமாரசுவாமி பிரபாகரன் — வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

★ கந்தையா கிருபைராஜா — சுதுமலை தெற்கு.

★ அரியரட்ணம் பிரேம்குமார் — வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

★ சிவாஜி ராஜ்மோகன் — [illegible]

★ [illegible] — வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ ராஜரட்ணம் கோபாலரட்ணம் — சிவகுருவீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ முத்துலிங்கம் ஜெகமோகன் — சுதுமலைதெற்கு.

★ துரைராஜா விமல் — கச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ ராஜரட்ணம் ஜெகதீஸ்வரன் — மட்டுவில் கிழக்கு.

★ பொன்னுச்சாமி பரமேஸ்வரன் — சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

★ சண்முகலிங்கம் சுபேரன் — சுன்னாகம்.

★ சிவகுருநாதன் விஜயகுமார் — மானிப்பாய் வடக்கு, சம்மாட்டிமலை, மானிப்பாய்.

★ வேலுப்பிள்ளை சோமசுந்தரம் — வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

★ இரட்ணம் துரைநாயகம் — மானிப்பாய் வீதி, கூழாவடி, ஆனைக்கோட்டை.

★ தங்கராஜா யோகராசா — சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

★ இராசரட்ணம் மகேந்திரன் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

★ வேலாயுதம் ஜெயசூரியன் — 912/ஏ, சின்னயர் வீதி, தெல்லிப்பழை.

சின்னக்குட்டி ராசா — கோயில்புரம், தெல்லிப்பழை.

★ நடராஜா ஆனந்தராஜா — 9 ஆம் குறுக்குத் தெரு, விஜயபுரம், கொழும்புத்துறை.

★ ஜோசப் ஜேசுராஜன் — 513, தும்பளை, அளவெட்டி.

★ தம்பையா தவராசா — இணுவில்.

★ பரராஜசிங்கம் சர்மிலன் — மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ சங்கரலிங்கம் நிமலதாசன் — கோணாவில் மேற்கு, சாவகச்சேரி.

★ நடராஜா பரமேஸ்வரன் — நுணாவில், சாவகச்சேரி.

## பாடசாலைகள் திங்களன்று ஆரம்பம்

வலிகாமம்தெற்கு, ஏப்.19

அனைத்து அரசாங்கப்பாடசாலைகளும் இரண்டாம் தவணைக்காக நாளை மறுதினம் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாக உள்ளன. (ஐ-152)

## கூட்டுறவுச் சபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏழாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ், ஆஸ்பத்திரிக்கு முன்பாக மணிக்கூட்டு வீதியிலுள்ள யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். (ஐ-4)

## கூட்டுறவு பயிற்சியாளர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவுக்கு பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இதற்கு விண்ணப்பிக்க முடியும் இதற்கான நேர்முகப் பரீட்சை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

இதேவேளை கடந்தகாலங்களில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவு, சாதாரண பிரிவு, கனிஷ்ட பிரிவுகளில் பயிற்சி பெற்று பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கு, பழைய பாடத்திட்டங்களில் பரீட்சையை நடத்துவதற்கு வசதியாக சம்பந்தப்பட்டோரை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபரிடம் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ- 4)

**நாளை**

**சித்திரை 7**

ஞாயிற்றுக்கிழமை

திதி: திரயோதசி நள்ளிரவு 12.03 வரை.

நட்சத்திரம்: உத்தரம் மாலை 6 .10 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 9.02-10.32

ராகுகாலம்: 4.32-6.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பிரிவுபசாரம்

கொழும்புத்துறை, ஏப். 19

யாழ். பிரதேச செயலாளராகக் கடமையாற்றி பல்கலைக்கழகப் பதிவாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள கலாநிதி க. குணராசாவுக்கு பிரிவுபசார வைபவம் ஒன்றை யாழ். பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் இன்று முற்பகல் 10 மணியளவில் சுண்டுக்குளியில் நடத்தவுள்ளது. (ஐ-30)

## மண்எண்ணெய் தாராளம்

வலிகாமம் தெற்கு, ஏப். 19

யாழ். குடாநாட்டில் தற்போது மண்ணெண்ணெய் மிகத் தாராளமாகக் கிடைக்கின்றது.

யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வழங்கப்படும் மண்ணெண்ணெய் எரிபொருள் விற்பனை நிலையங்கள், தனியார் எரிபொருள் விற்பனை முகவர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகள் மூலம் மக்களுக்கு வேண்டிய அளவுக்கு கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நடவடிக்கைகளினால் கடந்த காலங்களில் தெருவோரங்களில் மண்ணெண்ணெய் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த எண்ணெய் வியாபாரிகள் எண்ணெய் வியாபாரத்தைக் கைவிட்டுள்ளனர். (ஐ-152)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 19

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (இ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 19

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெறும். (இ-4)

## நூலகம் இயங்குகின்றது

செம்பியன்பற்று, ஏப். 19

கடந்த 6 மாதங்களுக்கு மேலாக இயங்காமல் இருந்த செம்பியன்பற்று வடக்கு பிலிப்நேரியார் பொது நூல் நிலையம் கடந்த 8ஆம் திகதி முதல் மீண்டும் இயங்கத் தொடங்கி உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தினால் எதிர் வரும் 26 ஆம் திகதி நடத்தப்படவிருக்கும் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா கற்ரை நெறிக்கான தெரிவுப்பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெற விருக்கிறது.

கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இப்பரீட்சையை நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இப்பரீட்சைக்கு நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தோற்ற இருப்பதால், யாழ்ப்பாணத்திலும் இப்பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்யுமாறு ஈ. பி. டி பி. அமைப்பினர் கேட்டுக்கொண்டனர்.

இதனை அடுத்தே யாழ். மத்திய கல்லூரியிலும் இப்பரீட்சையை நடத்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்)

படைவீரர்கள் பலியான சம்பவம் இடம் பெற்ற நாகர்கோயில் பகுதியும் இப்படியான பிரதேசங்களில் ஒன்றாகும்.

யாழ் குடாநாட்டில் இவ்வாறு இதுவரை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாத பகுதிகளுக்கு படையினர் அனுப்பப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

"இராணுவம் இவ்வாறு பெரிய அளவில் நடவடிக்கைகளுக்குத் தயாராகும் போது ஆயிரக்கணக்கான ஆளணிகளை அங்கும் இங்கும் நகர்த்தும் — இராணுவ உபகரணங்களையும் நகர்த்தும்.

இவை எல்லாவற்றையும் இரகசியமாகச் செய்ய முடியாது. இராணுவம் ஏதோ நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது என்பதை இவற்றை அவதானிக்கும் எவராலும் ஊகித்துக் கொள்ள முடியும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-10)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் மீளக் குடியேற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளைச் சந்தியில் இருந்து மல்லாகம் பக்கமாக 50 மீற்றர் தொலைவில் படையினரின் காவலரண் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கருணதிலகா தலைமையில் பலாலியில் நடந்த இம் மாநாட்டில் 51 ஆவது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலேகல்ல, 52 ஆவது படையணி கட்டளை அதிகாரி பிரிகேடியர் செனவிரத்தின, கடற்படை அதிகாரி அட்மிரல் சந்தகிரி உட்பட இராணுவ, பொலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

யாழ். அரச அதிபர் செ பத்மநாதன், பிரதேச செயலர்கள், செயலக அதிகாரிகள் ஆகியோரும் மாநாட்டில் பங்கு பற்றினர்.

மீளக் குடியேற அனுமதிக்கப்படும் இப் பகுதிகளில் விவசாயம் செய்ய மக்கள் அனுமதிக்கப்படுவார்கள். வாழை தவிர்ந்த ஏனைய பயிர்களை அவர்கள் பயிர் செய்ய முடியும்.

இப் பகுதிகளில் குடியேற விரும்புபவர்களின் விவரங்கள் பிரதேச செயலர்களால் சேகரிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படும்.

அதன் பின் அப்பகுதிகளை அரச அதிகாரிகளும், பாதுகாப்பு அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிடுவர். அதன் பின் மக்கள் அங்கு குடியமர்த்தப்படுவர்,

தெல்லிப்பழை பாதுகாப்பு அரணுக்குள் உள்ள கிராமங்களில் மக்கள் மீளக் குடியமர்வது தொடர்பாக காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். (இ-3)

## 2 வாரங்களில் நாட்டில் மழை

கொழும்பு, ஏப். 19

தற்போது நிலவி வரும் வரட்சி இருவாரங்களுக்குள் முடிவடையும் எனவும் இடியுடன் கூடிய பலத்த மழை நாடெங்கும் பெய்யும் எனவும் வளிமண்டல திணைக்களம் தெரிவித்துள்ளது.

## குடாநாட்டுக்கு பௌத்த பிக்குகள் தூதுக்குழு

பௌத்த பிக்குகளின் சமாதான தூதுக்குழு ஒன்று இம் மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் வர இருப்பதாக 'தினமின' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

## ஜே/ 263 - 270 அ. அட்டை

உரும்பிராய் மேற்கு ஜே/ 263 பிரிவுக்கான விசேட அடையாள அட்டை ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12 00 மணி வரை கோண்டாவில் இ. போ. ச. டிப்போவுக்கு அருகாமையிலும் —

நீர்வேலி மேற்கு ஜே/270 பிரிவுக்கான விசேட அடையாள அட்டை திங்கள் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை நீர்வேலி மேற்குகிராம அலுவலர் அலுவலகத்திலும் — விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது (இ)

## மன்னாருக்கு சப்பல் சேவை

காங்கேசன்துறையில் இருந்து மன்னாருக்கு எதிர் வரும் 22 ஆம் திகதி பயணிகள் சப்பல் சேவை ஒன்று இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

மன்னாருக்குச் செல்ல விரும்பும் பயணிகள் யாழ். செயலகத்தில் நாளைக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது. (இ-3)

## புதிய தலைவரை...

(முதலாம் பக்கத் தொடர்)

வித்தார்.

சீதாராம் கேசரியின் கடிதம் குறித்து ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்தாலோசிக்கப்படும் என்று ஐக்கிய முன்னணியின் செய்தித் தொடர்பாளர் ஜெயப்பால்ரெட்டி தெரிவித்தார்.

கேசரி நேற்று அனுப்பி வைத்திருக்கும் கடிதம், ஆட்சி அமைக்க உரிமை கோரும் காங்கிரஸின் முன்னைய கடிதம் விலக்கிக் கொள்ளப்படுவதை குறிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-4)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தார்.

தற்சமயம் கலட்டி ஊடான பயணம் மாலை ஆறு மணியுடன் தடைசெய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

# யாழ். வின்ஸர் தியேட்டரை இயங்க வைப்பதற்கு முயற்சி

கொழும்பு, ஏப். 19

யாழ். நகரில் உள்ள வின்ஸர் படமாளிகையை மீண்டும் இயங்கவைக்க வடமாகாண புனரமைப்பு, மீள் குடியமர்வு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தப் படமாளிகையின் உரிமையாளருடன் அந்த அமைப்பு தொடர்பு கொண்டுள்ளதாகவும் —

இந்தப்படமாளிகையை இயங்கவைக்க உள்ளூர் முகவர் ஒருவரை கண்டறியுமாறு யாழ். அரச அதிபரை இந்த அமைப்பு கோரியுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் புனர்வாழ்வுப் பிரிவின் களஞ்சியமாக இருக்கும் இப்படமாளிகை விரைவில் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

# பொன்னாலைப் பாலம் ஊடாக வாரம் ஒரு தடவை போக்குவரத்து

யாழ்ப்பாணம், ஏப். 19

காரைநகர் பகுதியில் மக்கள் மீளக்குடியமர வசதியாக பொன்னாலைப் பாலத்தை வாரத்தில் ஒரு நாளைக்கு பொதுமக்களின் பாவனைக்கு திறக்க இணக்கம் ஏற்பட்டுள்ளது என்று யாழ் அரச அதிபர் பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பலாலியில் நடந்த உயர்மட்டமாநாட்டில் இது தொடர்பாக ஆராயப்பட்டு இணக்கம் ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

சேதமடைந்துள்ள பொன்னாலைப் பாலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் திருத்தப்படும் என்றும்—

அப்பாலம் திருத்தப்பட்டதும் பொது மக்கள் போக்குவரத்துக்கு அப்பாதை நிரந்தரமாகத் திறக்கப்படும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

காரைநகரில் மீளக் குடியமர விரும்புபவர்களின்விவரங்களை ஊர்காவற்றுறைஉதவி அரசாங்க அதிபர் சேகரிக்கவுள்ளார்.

(இ-3)

# பெரும் நெருக்கடி நிலைமை; முல்லையில் உருவாகின்றது

## அரச அதிபர் அரசுக்கு மகஜர்

கொழும்பு, ஏப். 19

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகளை தீர்த்து வைக்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஆர். தர்மகுலசிங்கம் அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கேட்டுள்ளார்.

முல்லைத்தீவில், வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல், செப்ரிசீமியா, மலேரியா, மூளை மலேரியா போன்ற நோய்கள் பெருமளவில் பரவுகின்றன. அவற்றைத் தடுப்பதற்குரிய வழிமுறைகள் மேற்கொள்ள வழியில்லை.

பாம்புக் கடிக்குரியமருந்து, விசார் நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்து, செப்ரிசீமியாவுக்கான மருந்து போன்றவை அவசரமாகத் தேவைப்படுகின்றன.

கடும் வரட்சியால் நெற்செய்கை மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. குளங்களில் நீர் மட்டம் வற்றிவருகிறது. சிறுபோக நெற்செய்கை கேள்விக் குறியாக இருந்து வருகிறது

1996 ஏப்ரலின் பின்பு இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உணவு விநியோகிக்கப்படவில்லை. இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் வறுமை நிவாரணத்துக்குரிய உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது இதனால் வறுமைக்கோட்டிற்கு உள்பட்ட மக்கள் பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும் எதிர் நோக்கி உள்ளனர்.

பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறையும் ஆசிரியர் பற்றாக்குறையும் விசுவரூபம் எடுத்துள்ளன. இதனால் மாணவர் கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது.

95 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் கொட்டில்களின் கூரைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன அவற்றை வேய்வதற்குரிய கிடுகுகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

இப்படி அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

## பாகிஸ்தான் செய்மதி

இஸ்லாமாபாத், ஏப்: 19

செய்தித் தகவல் செயற்கைக் கோள் ஒன்றினை விண்வெளிக்கு அனுப்ப பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

'பக்ஷட்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்திற்கு நேற்று முன் தினம் பாகிஸ்தான் அமைச்சரவை ஒப்புதலை அளித்தது.

(ஐ-10)

## மேற்குக்கரை பாதைகள் மூடப்பட்டன

டெல் அவிவ், ஏப். 19

மேற்குக் கரையிலிருந்து இஸ்ரேலுக்குள் நுழையும் அனைத்து பாதைகளையும் இஸ்ரேல் மூடியுள்ளது.

இஸ்ரேலிய பொதுமக்கள் மீது பலஸ்தீனர்கள் தாக்குதல் மேற்கொள்ளவுள்ளனர் எனக் கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த நுழைவாயில்கள் மூடப்பட்டதாக இஸ்ரேல் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் இஸ்ரேலின் தலைநகரான டெல் அவிவ்வில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலின் போது 3 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

அச்சம்பவத்தை அடுத்து மேற்குக் கரை நுழைவாயில்கள் அனைத்தும் அப்போது மூடப்பட்டன. பின்னர் அவை திறக்கப்பட்டன.

மனிதாபிமான அடிப்படைத் தேவைகள் மாத்திரம் மேற்குக்கரையூடாக அனுமதிக்கப்படும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

(ஐ-10)

# நாகர்கோயிலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 19

நாகர்கோயிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடியில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் இதனைத் தெரிவித்தது.

ஏழு படையினரே இறந்ததாக முதலில் வெளிவந்த தகவல்கள் தெரிவித்திருந்தன. (இ-4)

# பெண்போல நடித்தவர் மருத்துவ பரிசோதனை

கொழும்பு, ஏப்: 19

பெண்ணைப்போல் நடித்து சிறந்த பெண் தொழில் அதிபருக்கான விருதையும் பெற்றுக் கொண்ட ஆண் ஒருவர், நேற்று நீதிவானால் மன நோய் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

36 வயதான சத்தம்பிகே செனிவிரட்ண என்ற இந்த நபரின் முழுமையான உடல் நிலை பற்றி மருத்துவரின் அறிக்கையைப் பெறுமாறு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிவான் உத்தரவிட்டார். செனிவிரட்ண அவரது சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் ஆஜரானார்.

அவர் 3 வருடங்களாக ஒரு பெண்ணைப்போல் நடித்து 3 கோடியே 30 லட்சம் ரூபா வங்கிக் கடனைப் பெற்றிருந்தார். இறால் ஏற்றுமதி வர்த்தகத்தையும் சிறப்பாக நடத்தி வந்ததுக்காக 1995 ஆம் ஆண்டுக்கான பெண் தொழிலதிபராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார்.

அதற்காக சிரேஷ்ட அரசாங்க அமைச்சரிடமிருந்து அவர் விருது ஒன்றையும் பெற்றுக் கொண்டார்.

அது மட்டுமன்றி 29 வயது ஆண் ஒருவரை அவர் சட்டபூர்வமாகத் திருமணம் செய்திருப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

(இ-4)

## வெள்ளி விழா

வடமாகாண தெங்கு பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் யாழ்ப்பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் வெள்ளி விழா அடுத்த மாதம் கொண்டாடப்படவுள்ளது.

இதனை ஒட்டி முத்திரை ஒன்றையும் வெள்ளி விழா மலர் ஒன்றையும், வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஐ-30)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org